1974 மார்ச் 20]

இசைத்தட்டு நடனம்.

*512 வினா—திரு. கோவை செழியன்: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ரெக்கார்டு டான்ஸ் என்ற பெயரில் நடைபெறும் ஆபாச நடனங்களை தடை செய்யும் செயற்குறிப்பு இந்த அரசின் ஆய்வில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஆம்.

திரு. கோவை செழியன்: தலைவர் அவர்களே, இன்றுங்கூட பல இடங்களிலே திருவிழாக்காலங்களிலே பொருட்காட்சிகளை வைத்து அதிலே ரிக்கார்டு டான்ஸ் என்ற அரை நிர்வாண நடனங்கள் நடத்தப்படுகின்றன. இதனால் இளைஞர்கள் கெட்டுவிடுவார்கள். இப்படி நடத்துவதில் பெரிய இடத்து சம்பந்தம் இருக்கிறது. இதனால் போலீஸ்காரர்களும் பயந்துவிடுகிறார்கள். நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை. சென்னையிலே பல பெரிய ஹோட்டல் களிலே காபரே டான்ஸ் என்ற ஆபாச நடனங்கள் நடத்தப் படுகின்றன. இதனால் மற்றவர்கள் குழந்தைகளோடு அங்கு சென்று சாப்பிடுவதற்குக் கஷ்டமாக இருக்கிறது . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியைப் போடுங்கள்.

திரு. கோவை செழியன்: டான்சிலே எத்தனை இருக்கிறது என்று கூறுகிறேன் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது வேண்டாம், கேள்வியைப் போடுங்கள்.

திரு. கோவை செழியன்: "டிஸ்கொத்தே" என்ற பெயரிலே விளக்குகளை அணைத்துவிட்டு ஆபாச நடனங்களும் நடத்தப்படு கின்றன; இவற்றையெல்லாம் தடை செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இதுபோன்ற பேச்சுக் கள், கேள்விகள் நம்முடைய மாமன்றத்திலே பல நேரங்களிலே எழுந்ததன் காரணமாக அரசு நம்முடைய காவல் துறையினர் மிகுந்த கடுமையாக இதிலே இருக்கவேண்டும் என்று எடுத்துச் சொல்லியிருப்பதாலே ஆபாச நடனங்கள் குறைந்து வருகின்றன.

பொருட்காட்சியைப் பொறுத்தவரையிலும் ஆபாச நடனங்களைத் தடுப்பதற்குரிய சட்டங்களை நாம் நிறைவேற்ற முடியவில்லை. அதனால் அவர்கள் சட்டங்களின் இடுக்குகளுக்குள் நுழைந்து தப்பிவிடுகிறார்கள். பொருட்காட்சியை நடத்துகிறவர்கள் முதலிலே வைப்புத் தொகை என்று 10 ஆயிரம் ரூபாய் கட்ட வேண்டும் என்றும் அவர்களுக்கு உரிமம் அளிக்கப்படுகின்ற நேரத்திலே போடப்படுகின்ற நிபந்தனைகளை அவர்கள் மீறினால் இந்த 10 ஆயிரம் ரூபாயைப் பறிமுதல் செய்யவும் அதைத் தடுத்து நிறுத்தவும் வழிவகை செய்திருப்பதால் பொருட்காட்சிகளிலே இப்பொழுது ஆபாச நடனங்கள் நடத்தப்படுவது ஓரளவிற்குக் குறைந்துகொண்டு வருகின்றது.

சில இடங்களிலே காவல் துறையினர் கடுமையாக நடவடிக்கை எடுத்ததன் காரணமாக குறைந்து வருகின்றது. மேலும் நகராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்கள் இவைகள் எல்லாம் தனியார்களுக்கு பொருட்காட்சிகளை ஏலத்திலே விடுவது போன்ற காரியங்களைச் செய்யக்கூடாது என்று எடுத்துச் சொல்லப் பட்டிருக்கிறது. அப்படி விடுவதாக இருந்தால் இந்த நிபந்தனைகளை எல்லாம் அவர்கள் ஏற்று நிறைவேற்றவேண்டுமென்றும் அரசின் சார்பிலே எடுத்துக்கூறப்பட்டது.

அதற்கும் ஒரு சட்டம் கொண்டுவரலாமா என்று யோசித்துக் கொண்டிருக்கிறோம். நகராட்சி மன்றங்கள் தாங்களே உரிமை பெற்று நடத்த வேண்டுமென்றால் அதற்காக ஒரு சட்டம் கொண்டு வரலாமா என்று ஆலோசிக்கப்படுகிறது.

ஹோட்டல்களிலே அப்படிப்பட்ட நடனங்கள் பெருமளவிற்குக் குறைந்து இருக்கின்றன. எந்த ஹோட்டலிலே அப்படியிருக்கிறது என்று கோவை செழியன் அவர்கள் அனுபவப்பூர்வமாகக் கூறினால் உடனடியாக நடவடிக்கை எடுக்க ஏதுவாக இருக்கும்.

திரு. கே. என். குமாரசாமி: தலைவர் அவர்களே, இந்த ஆபாச நடனங்கள் தனிப்பட்டவர்களால் பொருட்காட்சிகள் என்ற பெயராலே நடத்தப்பட்டு வருகின்றன. அங்கே பொருட்காட்சி என்றால் நான்கு கடைகளைத்தான் வைத்திருக்கிறார்கள், வேறு ஒன்றும் கிடையாது, ஆபாச நடனங்களைத்தான் நடத்துகிறார்கள். அதிகாரிகளிடம் சொன்னால் அவர்கள் நடவடிக்கை எடுப்பதில்லை. அப்படிப்பட்டவர்களுக்கு லைசென்சே கொடுக்கக் கூடாது

1974 மார்ச் 20]

என்றும் இந்த நடனக் காட்சிகளை அறவே ஒழிப்பதற்கும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கக்கூடிய முறையிலே அதைத் தடை செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நடனக் காட்சியை அறவே தடுப்பது என்று எந்தச் சட்டமும் போடமுடியாது. நடனக் காட்சி என்று நடத்திக்கொண்டிருக்கும்பொழுது திடீரென்று ஒரு காட்சியிலே ஆபாச நடனம் வந்துவிட்டால் அவர்கள் பெற்ற அனுமதியை அதற்குப் பயன்படுத்திக்கொள் கிறார்கள். நான் ஏற்கனவே சொன்னபடி அவர்கள் நிபந்தனை களை மீறினால் உரிமத்தை ரத்து செய்யவும் அவர்கள் கொடுத்த வைப்புத் தொகையைப் பறிமுதல் செய்யவும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. எல்லா இடங்களிலும் நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொல்லிவிடமுடியாது. விழுப்புரம், கள்ளக் குறிச்சி ஆகிய இடங்களிலே நடைபெறுவதாகப் புகார் தெரிவிக்கப் பட்டு உடனடியாக நிறுத்தப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இளைஞர் அணி.

*513 வின—**திரு. ஜி. ராமசாமி:**

திரு. என். டென்னிஸ்: மாண்புமிகு பின் தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இளைஞர் அணியில் பணிபுரிபவர்களுக்கு வேலைவாய்ப்பு களில் முன்னுரிமை வழங்கப்படுகிறதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: (அ) ஆம்.

(இ) இளைஞர் அணியில் ஓராண்டு அல்லது அதற்கு மேல் பணிபுரிந்தவர்களுக்கு அரசுப் பணிகளுக்கு நியமனம் செய்வதில் முன்னுரிமை அளிக்கப்படும்.

2. அரசுப் பணிகளுக்கு நியமனம் செய்வதற்கான உச்ச வயது வரம்பைக் கணிக்கும்போது இளைஞர் அணியில் ஆற்றிய பணிக் காலத்தை (அதிகபட்சம் இரண்டு ஆண்டுகள்) கழித்து விடுமாறு அரசு ஆணை பிறப்பித்துள்ளது.